1st April 1955]

SRI M. NARAYANA KURUP :—" May I know, Sir, whether any of the students of the Andhra State are studying in any of the colleges of this State? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, many of them are studying here."

SRI S. RAMALINGAM :—" அந்த ராஜ்யத்திலுள்ள இன்ஜினியரிங் காலேஜில் நம் ராஜ்ய மாணவர்கள் சேரும்போது ஆந்திர மாகாணம் பிரியுமென்றே யாரும் நினைக்கவில்லை. ஆனால் ஆந்திர மாகாணம் பிரிந்த பிற்பாடு, அந்த ராஜ்யத்தில் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையாலும், சர்க்காருடைய வெறுப்பு மனப்பான்மையாலும் அந்த ராஜ்யத்திலுள்ள நம் மாணவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். சர்க்காருடைய விரோத மனப்பான்மை அவர்களுடைய வாழ்க்கைக்கே மிகப் பெரிய பாதகமாக இருக்குமோ என்று பயந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் இவ்விஷயத்தில் காலதாமதம் செய்யாமல் மறுபடியும் வருகிற ஆண்டில் பள்ளிக்கூடம் திறப்பதற்கு முன்னேயே அவர்களை நம் ராஜ்ய இஞ்ஜினியரிங் கல்லூரிக்கு மாற்றுவதற்கு சிண்டிகேட்டுடன் கலந்து இறுதியான முடிவை அரசாங்கம் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" ஆந்திர சர்க்கார் இந்த மாணவர்களிடையே விரோத மனப்பான்மையோடு இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. சர்க்காரைப் பொறுத்தவரையில் விரோத மனப்பான்மையே கிடையாது. அங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையைக்கொண்டு மாணவர்கள் புகார் கூறுகிறார்கள். அவர்கள் கூறுவதையும், இதர விஷயங்களையும் கலந்துகொண்டு, நம்முடைய தேசத்திற்கும், நம் இரு ராஜ்யங்களுடைய நல்லுறவுக்கும் ஏற்ற வகையில் ஒரு முடிவு செய்யப்படும். அந்த மாணவர்களுடைய மனப்பான்மையை வைத்துக்கொண்டு மாத்திரம் இவ்விஷயத்தில் எவ்வித முடிவும் எடுக்க முடியாது."

Court of Enquiry for hotel workers.

* 1806 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether it is a fact that the Government propose to appoint a Court of Enquiry to go into the conditions of hotel workers in this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" No, Sir."

SRI K. P. GOPALAN :—" Sir, are the Government aware that there is no security of service as far as the hotel workers are concerned in this State and no minimum wages have been fixed? They get a monthly wage of even Rs. 4. The Shops and Establishments Act is not applicable to the hotel workers. In view of all these facts, will the Hon. the Minister be pleased to constitute a Court of Enquiry to go into the conditions of the hotel workers in this State and make a report to the Government? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Sir, constituting a Court of Enquiry will not meet the situation. The Hotel Workers' Union has presented a memorandum to the Government explaining their difficulties and that is under examination by the Government for taking proper action."

Loans to Handloom Co-operative Societies in Coimbatore district.

* 1763 *Q.*—SRI T. S. ARDHANARI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the loan from the Cess Fund towards capital expenditure to an extent of Rs. 80 per loom and

subsidy towards establishment charges to an extent of Rs. 50 for a Society having more than 50 looms and Rs. 100 per month for a Society having more than 100 looms are given to the newly started handloom co-operative societies in the Coimbatore district;

(*b*) whether these facilities are given to Periamelapalayam Jamakkala Handloom Weavers' Co-operative Society in the Erode Circle of the Coimbatore district; and

(*c*) whether any rebate is allowed to the purchases of handloom cotton fabric carpets?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) The Coimbatore Co-operative Central Bank has so far been allotted Rs. 1,30,500 from the Cess Fund for providing working capital loans to the new and existing Weavers' Co-operative Societies in Coimbatore and Erode Circles which work the Cess Fund Scheme at the rate of Rs. 80 per loom. As regards payment of subsidy towards the running expenses of the Weavers' Co-operative Societies, the Government of India have been addressed for allotment of funds for disbursement.

" (*b*) During 1954 a sum of Rs. 700 was sanctioned to the Periamelapalayam Carpet Weavers' Co-operative Society towards working capital. Further assistance from Cess Fund to the Society has been stopped, pending a decision of the Government of India on the question whether carpet weaving societies will be eligible for Cess Fund assistance.

" (*c*) No rebate is allowed on the purchases of cotton carpets."

SRI T. S. ARDHANARI :—" செஸ். பண்டில் புதிய கைத்தறி கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஒவ்வொரு தறிக்கும் 80 ரூபாய் மூலதனம் செஸ் பண்டு நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஆனால் கோயமுத்தூர் ஜில்லாவிலே பெரியமேலப்பாளையம் சொசைடியிலுள்ள தறிகளுக்கு இந்த மூலதனம் கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி என்றால் ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" பெரியமேலப்பாளையத்தில் சாதாரண துணிகள் நெய்யப்படுவதில்லை. ஜமக்காளங்கள்தான் நெய்யப்பட்டு வருகின்றன. பெரியமேலப்பாளையம் சொசைடிக்கு ரூ. 700 சர்க்கார் கொடுத்திருக்கிறதென்று முன்னமே சொன்னேன். அதற்கு மேல் கொடுப்பதற்கு சாதாரண துணிகளுக்கு ரிபேட் கொடுப்பதுபோல் இதற்கும் கொடுக்க முடியாது என்பதால் இதைப்பற்றி மத்திய அரசாங்கம் தான் முடிவு செய்யவேண்டியிருக்கிறது. ஆதலால் இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் முடிவு தெரிந்ததும் இதை கவனிக்கப்படும்."

9-10 a.m. SRI K. V. RAMASWAMI :—" கைத்தறியினால் நெய்யப்படுகிற ஜமக்காள விற்பனைக்கும் ரிபேட் கொடுப்பதைப்பற்றி சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?"

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" பருத்தி நூலினால் நெய்யப்படும் ஜமக்காள விற்பனைக்கு ரிபேட் கொடுக்கப்படுவதில்லை."

1st April 1955]

SRI S. RAMALINGAM :—" கைத்தறியினால் நெய்யப்படும் துணிகளின் விற்பனைக்கு சர்க்கார் இரண்டணா ரிபேட் கொடுத்து கைத்தறி வேலை செய்யும் தொழிலாளிகளின் வாழ்க்கையை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதேபோல கைத்தறியினால் நெய்யப் படும் ஜமக்காளங்களுக்கும் செஸ் நிதியிலிருந்து வசதி செய்து கொடுத்தால் அவர்களுக்கும் உதவியாக இருக்கும். கைத்தறியின் மூலம் நூல்புடவை நெய்பவர்களுக்கும் ஜமக்காளம் நெய்பவர்களுக்கும் அதிக வித்தியாசம் இருக்கமுடியாது. கைத்தறியின் மூலம் ஜமக்காளம் நெய்பவர்களின் வாழ்க்கையையும் புனரமைப்பதற்கு செஸ் நிதியிலிருந்து பணம் ஒதுக்க மத்திய சர்க்காருக்கு ராஜ்ய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறார்களா ? அப்படி சிபாரிசு செய்திருந்தால் தாமதமின்றி இந்தத் தொழிலாளிகளுக்கும் உதவி கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அதே அபிப்பிராயத் துடன் தான் மத்திய சர்க்கார் அங்கீகாரத்தை இந்த அரசாங்கம் கோரியிருக்கிறது என்று நான் முன்பே சொன்னேன்."

SRI B. K. NALLASWAMI :—" ஜமக்காளக் கூட்டுறவு சங்கங்கள் ஒன்றிரண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தும் போதிய பண வசதி இல்லாததினால் சரியாக நடப்பது இல்லை. நம் ராஜ்யத்தில் பத்தாயிரம் ஜமக்காளம் நெய்யும் தறிகள் இருக்கின்றன. அவைகளில் சுமார் ஆறாயிரம் ஜமக் காளத் தறிகள் பவானி தாலூகாவில் மட்டும் இருக்கின்றன. அவற்றில் சுமார் 100 தறிகள் மட்டும் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்திருக்கின்றன. ஆகையால் இன்னும் அதிகமான தறிகளை கூட்டுறவு சங்கத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளுவதற்கு பண உதவி செய்யய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" ஜமக்காளக் கைத தொழிலுக்கு பவானி பேர்போனது என்பது எனக்குத் தெரியும். மத்திய சர்க்காரின் அங்கீகாரம் கிடைத்த பிறகு எவ்வளவு தூரம் இந்தத் தொழிலின் அபிவிருத்திக்கு உதவி செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்யலாம்."

SRI M. KALYANASUNDARAM :—" ஜமக்காளம் நெய்வதும் கைத் தறியின் மூலமாகத்தான். கைத்தறித் தொழிலுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் ' செஸ் ' நிதி ஏற்படுத்தப்பட்டது. அப்படி யிருக்கும்போது ஜமக்காளம் நெய்யக்கூடியவர்களுக்கு செஸ் நிதியிலிருந்து உதவி அளிக்கக்கூடியவகையில் மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்திருக்கிறதா ? முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய தென்னவென்றால் ஜமக்காளம் கைத்தறி தானா இல்லையா என்ற சந்தே கம் முதலில் நம்முடைய சர்க்காருக்கு எழுந்ததா அல்லது மத்திய சர்க் காருக்கு எழுந்ததா என்று அறிய விரும்புகிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" சற்று முன்பு கனம் அங்கத்தினர் ஸ்ரீ ராமலிங்கம் அவர்களுடைய கேள்விக்குப் பதில் சொன்னேன். அதே அபிப்பிராயத்தைத்தான் இந்த அரசாங்கம் முன்னிருந்தே சொல்லிவருகிறது. ஆகவே, திருப்பித் திருப்பி கேட்கவேண்டிய அவசியம் இல்லை. செஸ் நிதியை மத்திய சர்க்கார் நிர்வகிக்கிறது. அவர்களுடைய அங்கீகாரத்தைப்பெற்றுத்தான் எந்தத் திட்டத்தையும் நிறைவேற்றியாகவேண்டும். அதற்கு அங்கீ காரம் வேண்டியிருக்கிறது. அதைக் கோரியிருக்கிறோம்."

Posting of Reserve Police at Pennadam.

* 1764 *Q.*—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Finance be pleased to state the reasons for sending Reserve Police to the Pennadam, Eraiyur, Kothattai and Hariheri villages of Vridhachalam taluk on the 17th November 1954?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" On the 17th November 1954, two sections of the Armed Reserve were sent to the